Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 37 இதழ் - 4 ஏப்ரல் - 2024

தனிப்பிரதி
ரூ.10/-

ஜெபியுங்கள் ! பங்குபெறுங்கள் !!

## 24 -ஆம்

## வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

"திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள் & "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்

இடம் :

**YMCA வளாகம், ஏலகிரி மலை.**

(வேலூர் மாவட்டம்)

ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்,
ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.
திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.

**நாள் : மே, 6, 7, 8 - 2024**

(திங்கள், செவ்வாய், புதன்)

**பதிவுக் கட்டணம்**
பெரியவர்கள் ரூ. 1000/-
சிறியவர்கள் ரூ. 700 /-

முன் பதிவுக்கு முந்துங்கள்
பதிவு செய்வது அவசியம்

...பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது - (சங். 116:15)



## திருமதி. ராஜாமணி அம்மையார்

**திருமறை ஆசான்** மாத இதழின் நிறுவன ஆசிரியர் ஐயா. **E.Z. செல்வநாயகம்** அவர்களின் மனைவியும், எங்களது அன்புத் தாயாருமான திருமதி. ராஜாமணி அம்மா அவர்கள் கடந்த 6.4.2024 இரவு தனது 92 -வது வயதில், தேவச் சித்தப்படி பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்துவிட்டார் என்பதை திருமறை ஆசான் குடும்பத்தாருக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- ஆசிரியர்

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. நிறுவன ஆசிரியர் உரை | 3 |
| 2. ஜெபம் | 14 |
| 3. பெண்கள் பகுதி | 17 |
| 4. வாலிபர் பகுதி | 20 |
| 5. சிறுவர் பகுதி | 23 |
| 6. கர்த்தர் நம்மை நினைத்... | 24 |
| 7. நாம் எங்கெல்லாம் பேச... | 28 |
| 8. தள்ளப்பட்ட மோசே | 30 |

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 37 April - 2024 Issue - 4**

ஆசிரியர் உரை

# ஆயிர வருட அரசாட்சி

இப்பாடத்தில் நாம் ஆயிரவருட அரசாட்சியின் போதனைகள் குறித்து ஆராயப் போகின்றோம். குறிப்பாக, **மிருகத்தின் முத்திரை, அந்திக் கிறிஸ்து, மகா உபத்திரவம்** போன்ற ஆயிரவருட அரசாட்சி போதனையில் பயன்படுத்தப்படும் முக்கியமான கோட்பாடுகள் குறித்து விவாதிக்க இருக்கிறோம். இத்தொகுப்பில் நாம் முக்கியமாக மூன்று அம்சங்களை கவனிக்கப் போகிறோம்.

1 ஆயிரவருட அரசாட்சி என்றால் என்ன?

2. இப்போதனையை கற்பிப்பது யார்?

3. இப்போதனை கற்பிப்பது என்ன?

## I. ஆயிரவருட அரசாட்சி என்றால் என்ன ?

ஆயிரவருட அரசாட்சி பற்றிய போதனைகள் பெரும்பாலும் வெளிப்படுத்தல் நூலை அவரவர் விருப்பத்திற்கேற்பப் புரட்டி சம்பந்தமில்லாமல் கொடுக்கப்படும் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. வெளிப்படுத்தின விசேஷ நூலில் சொல்லப் பட்டிருக்கும் **எண்களையும், அடையாளங்களையும், குறியீடு களையும்** சொல்லர்த்த ரீதியாகப் புரிந்து கொண்டு அதனடிப்படையில் இப்போதனைகள் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷ நூல் பெரும்பாலும் **உருவக மொழிநடையில் எழுதப்பட்ட ஒன்று** என்ற அடிப்படைப் புரிதல் ஆயிரவருட அரசாட்சி போதனையின் மர்மத்தைத் தெளிவுபடுத்த உதவும் ஒரு முக்கியமான திறவுகோல் ஆகும்.

ஆங்கில வேதாகமத்தின்படி அப்போஸ்தலன் யோவான், வெளிப்படுத்தல் 1:1ல் **உருவக மொழிநடை** குறித்து மிக நேர்த்தியாகத் தெளிவுபடுத்தியுள்ளார். தமிழ் வேதாகமத்தில் **தேவன்**

**தம்முடைய தூதனை அனுப்பி தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம் என்றிருந் தாலும்**, ஆங்கில வேதாகமத்தில் And He sent and **Signified** it by His angel to His servant John என்றுள்ளது. Signified என்ற வார்த்தையில் Sign என்னும் வார்த்தை உள்ளதை கவனியுங்கள். Sign என்றால் தமிழில் **அடையாளம்** என்று 'பொருள். இதன்படி பார்த்தால், வெளிப்படுத்தல் நூல் **அடையாளங்களையும், உருவக மொழி நடையையும்** கொண்டுள்ளதை நாம் அறிய முடியும்.

இந்நூலை மையமாகக் கொண்டு எத்தனை தவறான உபதேசங்கள் கிறித்தவ உலகில் உலாவி வருகிறதென்பதை நினைக்கும் பொழுது வியப்பாக இருக்கிறது. குறிப்பாக, இந்நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் எச்சரிப்பையும் மீறி மிகத் தவறான போதனைகள் இருப்பதைப் பார்க்கும்போது அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது. வெளிப்படுத்தல் 22:18–19 வசனங்களில் யோவான் இப்படியாக எழுதுகிறார். **இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் 'கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால் ஜீவபுத்தகத்திலிருந்தும். பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்.**

சரி, இப்போது ஆயிரவருட அரசாட்சி என்பதன் பொருள் என்ன என்று பார்ப்போம். ஆங்கிலத்தில் இது Premillennialism" என்றழைக்கப் படுகிறது. இவ்வார்த்தையை நாம் பிரித்துப் பார்ப்போம். ஆங்கில மொழியில் இவ்வார்த்தையில் உள்ள **Pre** என்பது முன்பதாக என்றும், **Millennium** என்பது **ஆயிரவருடங்கள்** என்றும், **ism** என்பது **உபதேச முறை** என்றும் பொருள் தரும். ஆக, ஆங்கிலத்தில் உள்ள இவ்வார்த்தையானது **ஆயிரவருட அரசாட்சிக்கு கொஞ்சம் முன்பு இயேசு மீண்டும் வருவார்** என்னும் கொள்கை முறையைக் கொண்டுள்ளது. இதை நாம் தமிழில் **ஆயிரவருட அரசாட்சி போதனை** என்று கூறுகிறோம். ஆயிரவருட அரசாட்சி போதனையை நம்புகிறவர்கள் **இரண்டு வகைப்படுவர்.** ஒரு வகையினர் **ஹிஸ்டாரிக் ப்ரீமில்லேனியலிசம்** (Historic Premillennialism) சார்ந்தவர்கள். மற்றொரு குழுவினர் **டிஸ்பென்சேஷனல் ப்ரீமில்லேனியலிசம்** [Dispensational Peremillennialism] சார்ந்தவர்கள் இந்த ஹிஸ்டாரிக் ப்ரீமில்லேனியலிசம் போதிப்பவர்கள், **ரகசிய வருகை** என்றழைக்கப்படும் Rapture மற்றும் அதோடு சம்பந்தமுடைய **சில போதனைகளை** நம்புவதில்லை.

நாம் இப்பாடத் தொகுப்பில் இன்றைக்குப் பிரபலமாகவும், பலராலும் நம்பப்படுகிறதாகவும் உள்ள **டிஸ்பென்சேஷனல் ப்ரீமில்லேனியலிசம்** போதனைகள் குறித்துப் பார்ப்போம்.

**டிஸ்பென்சேஷன்** என்ற ஆங்கில வார்த்தைக்கு **இறைவனின் வகுப்பாட்சி** அல்லது **ஆட்சி வகை** என்றும். இது **ஒரு கால அளவை** உள்ளடக்கியது என்றும் பொருள்படும். இப்போதனையை நம்புபவர்கள். எப்படி **சிருஷ்டிப்பின் வாரத்தில் ஏழு நாட்கள்** இருந்ததோ அதுபோலவே இந்தப் பூமிக்கும் ஏழு ஆட்சி வகைக் **காலங்கள் உண்டு என்றும்,** அவை ஏழு வகுப்பாக பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும் நம்புகிறார்கள். அவைகளை இங்கே ஒவ்வொன்றாகச் சொல்லுகிறேன் கவனியுங்கள்.

1. **அறியாமையின் காலம்** – (சிருஷ்டிப்பு முதல் – பாவத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சி வரை)
2. **மனசாட்சியின் காலம்** – (வீழ்ச்சி முதல் – ஜலப்பிரளயம் வரை)
3. **மனித ஆட்சியின் காலம்** (ஜலப்பிரளயம் முதல் – ஆபிரகாமின் அழைப்பு வரை)
4. **வாக்குத்தத்தத்தின் காலம்** (ஆபிரகாமின் அழைப்பு முதல் – சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது வரை.
5. **நியாயப்பிரமாணத்தின் காலம்** (சீனாய் மலையில் நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட து முதல் – இயேசுவின் ஊழிய நாட்கள் முடியும் வரை)
6. **கிருபையின் அல்லது சபையின் காலம்** (இயேசுவின் ஊழிய நாட்களின் முடிவு முதல் – இரண்டாம் வருகை வரை
7. **ராஜ்யத்தின் காலம்** (ஆயிரவருட அரசாட்சியின் காலம்)

## II. இப்போதனையைப் போதிப்பது யார்? என்று பார்க்கலாம். (டிஸ்பென்சேசன் ப்ரீமில்லேனியலிசம்)

கிறிஸ்துவின் ரகசிய வருகை குறித்தோ, அர்மகெதோன் யுத்தம் குறித்தோ, உலகத்தின் முடிவு குறித்தோ, இயேசு பூமிக்கு வந்து ராஜ்யத்தை ஸ்தாபித்து ஆயிரம் வருடங்கள் அரசாளுவார் என்பது குறித்தோ நீங்கள் பேசத் தொடங்கினால், கிறித்தவ உலகில் **மிகப் பெரும்பாலோரால்** பேசப்படும் ஒரு காரியத்தைத்தான் நீங்களும் பேசுகிறீர்கள். ஏனென்றால், கிறிஸ்துவை அறிந்தவர்ககளில் சுமார் 70 விழுக்காடு மக்கள் ஆயிரம் வருட அரசாட்சியையும், அது சார்ந்த உபதேசத்தையும் **அப்படியே நம்புகிறார்கள்.** இப்படிப் பலரால் நம்பப் பட்டுப் பேசப்படுகிறதென்பதால் மற்றவர்கள் **இந்த உபதேசத்தை எந்தவிதமான சோதனையும் செய்யாமல், இப்போதனைதான் சரி என்று அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள்.** இது பற்றி நீங்கள் கூடுதலாகத் தெரிந்துகொள்ள விரும்பினால் தொலைக்காட்சியில் வரும் கிறிஸ்தவ சேனல்களை பார்த்தாலே போதும். ஆம்,

அந்நிகழ்ச்சிகளில் உலகில் நடக்கும் பல சம்பவங்களை எப்படிக் **கடைசிகாலச் சம்பவங்களாக** மாற்றுகிறார்கள் என்பதை நீங்கள் கவனிக்க முடியும். அதுமட்டுமல்ல, கிறித்தவப் புத்தகக் கடைகளில் கடைசி காலச் சம்பவங்கள் குறித்து பல புத்தகங்களைக் காணமுடியும். ஆங்கிலத்தில், **டக் கிளார்க்** [Doug Clark] என்பவரால் எழுதப்பட்ட **அர்மகெதோனின் அதிர்வலைகள்** [Shock waves of Armageddon மற்றும் **ஜேக் வான் இம்பே** [Jack Van Impe] என்பவரால் எழுதப்பட்ட **நித்தியத்தின் விளிம்பில்** (On the edge of Eternity] போன்ற நூல்கள் இவைகளுள் பிரபலமானவை. ஒருவேளை. இவர்கள் பற்றியெல்லாம் எங்களுக்குத் தெரியாது என்று சொன்னால், இக்கொள்கையில் கொண்ட நம்பிக்கையினால் உலகெங்கிலும் பிரபலமான **பில்லி கிரஹாம்** (Billy Graham) பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க வாய்ப்புண்டு. இதுவும் போதாதென்றால் இன்னும், பல நவீன மொழியாக்க வேதாகமங்களில் **ஆயிரவருட அரசாட்சி குறித்தான போதனைக் குறிப்புகளைக்கூட** இடம் பெறச் செய்துள்ளனர். உதாரணமாக, **ஸ்கொபீல்டு ரெபெரென்ஸ்** [Scofield Reference Bible] வேதாகமம் மற்றும் **நெல்சன் ஸ்டடி** வேதாகமம் [Nelson Study Bible] போன்ற ஆங்கில வேதாகமங்களில் இதைக் காண முடியும்.

## III ஆயிரவருட அரசாட்சி எதைப் போதிக்கிறது?

நான் இங்கே முன்கூட்டியே ஒரு காரியத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதென்னவெனில், இப்போதனையில் வித்தியாசமான கொள்கைகளும், வகைகளும் இருக்கிறது. இது சம்பந்தமாக நீங்கள் யாராவது ஒருவரிடத்தில் பேச நேரும் போது, அவருக்கு இவைகள் எப்படி போதிக்கப்பட்டுள்ளதோ அதனடிப் படையில் தான் அந்த உரையாடல் இருக்கும்.

நான் இப்பாடத்தில், இன்றைக்கு பிரபலமாகவும், பரவலாகவும் உள்ள டிஸ்பென்சேஷனல் ப்ரீமில்லேனியலிசத்தின் கோட்பாடு களைக் கொண்ட – 1000 வருட அரசாட்சியின் போதனைகளை உங்களுக்குத் தருகிறேன். இதை நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டால், ஆயிரவருட அரசாட்சி பற்றிய தவறான போதனைகளை எந்தக் கோணத்தில் நீங்கள் கேட்டாலும் அதற்கு சரியாகப் பதிலளிக்க முடியும். இப்பொழுது இந்த உபதேசத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு கோட்பாடுகளில் சிலவற்றை விளக்கி கூறுவதன் மூலம் இதை நான் அணுக விரும்புகிறேன்.

### 1. ராஜ்ஜியம்

அருமையானவர்களே! ஆயிரம் வருட அரசாட்சி உபதேசத்தை நம்பு கிறவர்கள் **கிறிஸ்துவின் ராஜ்ஜியம் இன்னும் வரவில்லை என்று நம்புகிறார்கள்.** அதாவது, இயேசு முதல் முறை இப்பூமிக்கு வந்தபோது **பூமிக்குரிய ஒரு ராஜ்யத்தை** கட்டமைக்கும்

எண்ணத்தோடு தான் வந்தார் என்று சொல்லுவார்கள். இன்னும் அவர்கள், பழைய ஏற்பாட்டு வசனங்களெல்லாம் கிறிஸ்துவின் ராஜ்ஜியம் சரீரப் பிரகாரமானதென்றும், உண்மையாகவே பூமிக்குரிய ஒரு **சிங்காசனம் இருக்குமென்றும்,** அவர் பூமியிலே மாம்ச இஸ்ரவேலை அரசாளுவார் என்றும் சொல்லுவார்கள். அவர் ஒரு பூமிக்குரிய சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சி செய்வார் என்று அவர்கள் சொல்வது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தருகிறது. ஏனெனில், இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் செய்த **அதே தவறை** இவர்களும் செய்கிறவர்களாக உள்ளார்கள். எப்படியெனில், யூதர் களும் பூமிக்குரிய ஒரு ராஜ்யத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். இயேசு யோவான் 18:36 –ல் என் ராஜ்ஜியம் **இவ்வுலகத்திற்குரியதல்ல** என்று சொல்லி யிருந்தும் அதை அவர்கள் **தவறாகவே** புரிந்து கொண்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக **என் ராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியதல்ல. என் ராஜ்ஜியம் இவ்வுலகத்திற் குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்ஜியம் இவ்விடத்திற்குரியதல்ல** என்றார். யோவான் 6:15 –ல், ஒரு சமயம் யூதர்கள் அவரைப் பிடித்து **பூமிக்குரிய ராஜாவாக்க** முயற்சிக்கிறார்கள் என்பதை அறிந்த போது அவர்களிடமிருந்து **விலகி** அவர் மலைக்குப் போய்விட்டார். ஏன் ? ஏனென்றால், **அவருடைய ராஜ்ஜியம் இந்த பூமிக்குரியதல்ல.** ஆனால், ஆயிரவருட அரசாட்சி போதனையை நம்புபவர்கள் இயேசு ராஜ்யத்தை ஸ்தாபிக்கத்தான் **வந்தார்** என்றும், யூதர்கள் அவரை தங்களுக்கு ராஜாவாக ஏற்றுக் கொள்ளாததினாலே அவரது திட்டம் நிறைவேறவில்லை என்றும் கூறுவார்கள். எனவே, இதன் விளைவாக கிறிஸ்துவானவர் மீண்டுமாக வந்து **எதிர்காலத்திலே** ராஜ்யத்தை ஏற்படுத்தும் வரைக்கும் **ஒரு தற்காலிக மாற்று ஏற்பாடாக சபையை** ஏற்படுத்தினார் என்றும் கூறுவார்கள்.

நண்பர்களே, கிறிஸ்துவின் ராஜ்ஜியம் குறித்துப் பரிசுத்த வேதாகமம் சொல்லும் கருத்துக்கு இது **முற்றிலும்** முரணாக உள்ளது. **கிறிஸ்துவின் ராஜ்யம்** என்பது **கிறிஸ்துவின் சபை** என்றும். அது **முதல் நூற்றாண்டிலேயே** வந்துவிட்டதென்றும் வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. கிறிஸ்து பூமிக்குரிய ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க முயற்சித்துத் **தோல்வியுற்றதால் ஒரு தற்காலிக ஏற்பாடாக** சபை ஸ்தாபிக்கப்பட்டதென்று எண்ணுவதும், அப்படிப் பேசுவதும் கிட்டத்தட்ட **தேவதூஷணத்திற்குச் சமமானது.** எபேசியர் 3:10–11 சபை என்பது தேவனுடைய **அந்த ஞானத்தின்** வெளிப்பாடென்றும். சபையின் திட்டங்கள் **அநாதித் தீர்மானத்தின்படியானதென்றும்** வசனம் நமக்குச் சொல்லுகிறது. அப்படியிருக்கும்போது, சபை என்பது

ஒரு தற்காலிக ஏற்பாடு என்று நாம் சொல்லத் துணிவோமானால், நாம் தேவனுடைய ஞானத்தைக் குறைத்து மதிப்பிட்டு, அவரை எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களாகவே இருப்போம்.

இன்னும், இவர்களின் இப்போதனை சொல்ல வருவதை நீங்கள் தயவாய் கவனியுங்கள். கிறிஸ்துவானவர் ஒரு திட்டத்தை நிறைவேற்ற வந்து அதிலே அவர் **தோல்வியுற்றார்** என்று இப்போதனை சொல்கிறது. அருமையானவர்களே, இதை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் ? ஆயினும் ஆயிரவருட அரசாட்சி போதனையை நம்புகிறவர்களும், போதிப்பவர்களும் **ராஜ்ஜியம்** இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லையென்றும், கொஞ்ச காலத்தில் இயேசு பூமிக்கு வந்து ராஜ்யத்தை ஸ்தாபித்து 1000 வருடங்கள் அரசாளுவார் என்றும் உங்களிடம் கூசாமல் சொல்லுவார்கள்.

**இந்த உபதேசம் எல்லாவகையிலும் தவறானது** என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள என்னோடு சேர்ந்து சில வசனங்களை கவனியுங்கள்.

**மத்தேயு** 3:1-2 ல் யோவான் இப்படியாகப் பிரசங்கிக்கிறார். **மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது என்று.**

**மத்தேயு** 4:17 ல் இயேசு இப்படியாகப் பிரசங்கிக்கிறார். **மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று.**

**மத்தேயு** 10:7 ல், இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களை ஊழியத்திற்கு அனுப்பும்பொழுது **பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது** என்று பிரசங்கிக்கச் சொன்னார்.

**மாற்கு** 9:1 -ல், இயேசுவானவர், தம்மோடு நின்று கொண்டிருந்த யூதர்களிடம், இங்கே நிற்கிறவர்களில் சிலர் **தேவனுடைய ராஜ்ஜியம் பலத்தோடே வருவதைக் காணும் முன் மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று** மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அப்படியானால், இந்த மனிதர்கள் எல்லாரும் **ராஜ்ஜியம்** பற்றி இயேசு சொன்னதைத் **தவறாகப் புரிந்து கொண்டார்களா?** இன்னும், தன்னோடு நின்று கொண்டிருந்தவர்களிடம் தேவனுடைய ராஜ்ஜியம் **பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணிப்பதில்லை** என்று சொன்னதில் **இயேசுதான் தவறு செய்து விட்டாரா?** அல்லது இவர்கள் போதிக்கும் **ஆயிர வருட அரசாட்சி உபதேசம் தவறானதா?**. மூன்றில் ஒன்று தானே சரியாக இருக்க முடியும்!

மேலும், **கொலோசெயர் 1:13 ல்,** அப்போஸ்தலனாகிய பவுல் முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள், இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாகி அன்பின் **குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்** என்று எழுதுகிறார்.

**வெளிப்படுத்தல் 1:9 ல்,** யோவான் தன்னை **ராஜ்ஜியத்திற்குள்** இருக்கிற ஒரு சகோதரன் என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறார்.

அப்படியானால், இவ்வசனங்களில் **அப்போஸ்தலர்களாகிய யோவானும், பவுலும்** சொன்ன காரியங்கள் தவறானதா அல்லது இன்றைக்கு ஆயிர வருட அரசாட்சி உபதேசத்தைப் **போதிக் கிறவர்கள்** சொல்வது தவறானதா ?

இன்னும் கவனிக்க வேண்டிய ஒரு காரியம் என்னவென்றால், அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில், **சபை ஆரம்பமாவதற்கு முன்பு வரை ராஜ்ஜியம் என்பது வரப் போகிற ஒன்றாகவே** வசனங்களில் பேசப்பட்டிருக்கிறது. ஆனால், அப்போஸ்தலர் 2 – ம் அதிகாரத்திற்குப் **பிறகு, ராஜ்ஜியம் என்பது வந்துவிட்ட ஒன்றாகவும், ஏற்கனவே இருக்கின்ற ஒன்றாகவுமே பேசப் பட்டிருக்கிறது.** ஆகையால், **தேவனுடைய ராஜ்ஜியம்** என்பது **சபை தான்** என்பதை நீங்கள் இப்பொழுது புரிந்து கொண்டால், அது சரியான தொரு புரிதலை உங்களுக்குக் கொடுக்கும். உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக என்று நாம் ஜெபிப்பதில்லை. அப்படி **ஜெபிக்கவும் தேவை** யில்லை. ஏனெனில், **ராஜ்ஜியமாகிய சபை** முதல் நூற்றாண்டிலேயே வந்து சேர்ந்து, **இப்பொழுது இருக்கின்ற ஒன்றாக உள்ளது.**

### 2 கடைசி காலத்தின் அடையாளங்கள்

இன்றைக்கு பலர் முடிவு சமீபமாய் இருக்கிறதென்றும், இயேசு சீக்கிரம் வரப்போகிறாரென்றும் சொல்லுவார்கள். அதற்கு ஆதாரமாக அடையாளங்களைப் பாருங்கள். நாட்கள் பொல்லாதவைகளாக இருக்கிறதென்று சொல்லுவதோடு வேதத்தில் சொல்லப்பட்டது போலவே எல்லாம் இந்நாட்களில் நடந்தேறுகிறது. எனவே, இயேசு சீக்கிரம் திரும்ப வந்து **ராஜ்ஜியத்தை ஏற்படுத்துவார்** என்பார்கள்.

அருமையானவர்களே, ஒருநாள் என் நண்பர் ஒருவர் என்னிடம் **முடிவு நெருங்கிவிட்டது** என்று உங்களுக்கு **தோன்ற வில்லையா** என்று கேட்டார். அதற்கு நான் அப்படி எனக்குத் தோன்றவில்லை. நான் ஏன் அப்படி நினைக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் **அடையாளங்கள் அப்படித்தானே** இருக்கிறது என்றார்.

இது போன்று பேசுபவர்களைப் பார்த்து நீங்கள் எதிர் கேள்வி எழுப்பினால், பெரும்பாலும் மத்தேயு 24:6–8 வசனங்களை மேற்கோள் காட்டுவார்கள்.

**யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப் படுவீர்கள். கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள் : இவை களெல்லாம் சம்பவிக்க வேண்டியதே. ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்திற்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும், பஞ்சங்களும் கொள்ளை நோய்களும் பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்,** இதனடிப் படையில் போர்களும் மற்றும் போர்களின் செய்திகளும், குறிப்பாக மத்திய கிழக்குப் பகுதிகளில் ஏற்படும் போர்கள் மற்றும் பஞ்சம், நில நடுக்கம் போன்ற இவைகளெல்லாம் முடிவின் அடையாளங்கள் என்று புலம்புவார்கள்.

ஆனால், நண்பர்களே மத்தேயு 24:6-8 வசனப் பகுதி இதுபற்றிப் **பேசுவதில்லையென்று** பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். மத்தேயு 24:3 ல், தேவாலயத்தின் அழிவு குறித்து சீஷர்களிடம் இயேசு சொன்னபோது, அவர்கள் இயேசுவிடம் இரண்டு கேள்விகள் கேட்டார்கள்.

1) இவைகள் எப்பொழுது சம்பவிக்கும் ?

2) உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன ?

வசனங்கள் 1 முதல் 34 வரை இயேசு **முதல்** கேள்விக்கான பதிலைக் கொடுக்கிறார். அது **எருசலேம்** மற்றும் **தேவாலயத்தின் அழிவு** பற்றிப் பேசப்படும் வசனங்கள். குறிப்பாக, 24:34 -ல் **இவை களெல்லாம் சம்பவிக்கும் முன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகா தென்று** மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்று **அழுத்த மாய்ச் சொல்லி** முடிக்கிறார்.

பிறகு, **இரண்டாவது** கேள்விக்கான பதிலை தருகிறார். வசனம் 36 -ல், '**அந்த நாளையும்,** (கடைசி நாள்) **அந்த நாழிகையையும்** என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்: பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள் என்று.

வசனங்கள் 6-8 முதல், சொல்லப்பட்டிருக்கிற யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும் **எருசலேமின் அழிவைக் குறிக்கும் வசனங்களே தவிர** கடைசி காலத்திற்கான அடையாளங்கள் அல்ல. அத்தோடு அந்தத் **தலைமுறையினரின் காலத்திற்குள் அது நடக்கும்** என்று இயேசு சொல்லுகிறாரேயொழிய, இன்றைக்கு நடந்து கொண்டிருக்கும் காரியங்கள் குறித்து அவர் அங்கே **பேசவில்லை.** ஆகையால், நண்பர்களே உலகத்தின் முடிவு சமீபமாயிருக்கிற தென்பதைக் குறிக்கும்படியான எவ்வித அடையாளங்களும் இந்த வேதபகுதியில் இல்லை.

**3 இரகசிய வருகை அல்லது பரவசப்படுதல்** [Rapture]

ஆயிர வருட அரசாட்சி உபதேசத்தை நம்புகிறவர்கள் இயேசுக் கிறிஸ்து விரைவில் **ரகசியமாக வந்து** பரிசுத்தவான்களை அழைத்துக் கொண்டு போவார் என்றும், மற்றவர்களை பூமியில் விட்டுச் செல்வார் என்றும் போதிப்பார்கள் மேலைநாடுகளில் கார்களுக்குப் பின்னால் எச்சரிப்பு என்று எழுதி ரகசிய வருகையின்போது இந்தக் காரில் ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்று ஸ்டிக்கர் கூட ஒட்டிக் கொள்வார்களாம். இக்கருத்தை மையமாகக் கொண்டு ஒரு திரைப்படம் கூட எடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு இந்த உபதேசத்தைக் கண்ணை மூடிக்கொண்டு நம்புபவர்கள் இன்னும் இருக்கவே செய்கிறார்கள். அருமையானவர்களே, வேதாகமம் **பரிசுத்தவான் களுக்கு தனி உயிர்த்தெழுதல்** என்றும், பிறகு கொஞ்ச காலம் அல்லது வருடங்கள் கழித்துப் **பாவிகளுக்கு தனி உயிர்த்தெழுதல்** என்றும் **எங்கும் போதிப்பதில்லை.**

அப்போஸ்தலர் 24:15 வசனம் நீதிமான்களுக்கு ஒரே உயிர்த்தெழுதல் என்று தான் சொல்லுகிறது. 2கொரிந்தியர் 5:10 ல், **ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது. தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்**

இன்னும், யோவான் 5:28-29 -ல் 'இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், **பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும்** அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் என்று **ஒரு காலத்தைக் குறித்தே** யோவான் எழுதுகிறார்.

**4 மகா உபத்திரவம்:**

ஆயிர வருட அரசாட்சி உபதேசத்தை நம்புகிறவர்கள், ரகசிய வருகையில் பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, உலகில் மீதமுள்ள ஜனங்கள் எல்லாரும் **ஏழு வருட காலம்** பூமியிலேயே விடப்படுவார்கள் என்று போதிப்பதோடு, இந்தக்காலத்தில் உலகில் மீதமிருப்பவர்கள் **மகா உபத்திரவத்தை** அனுபவிப்பார்கள் என்றும் சொல்லுவார்கள். இது கடுமையான துன்பத்தின் காலமாக இருக்குமென்றும், இன்னும் குறிப்பாக, உலகம் **இதுவரை கண்டிராத அளவிற்கு** கொடுமையானதாக இருக்குமென்றும் சொல்லுவார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட போதனைகள் எங்கிருந்து வருகிறது தெரியுமா ? **மத்தேயு** 24:21- ஐ, தவறான முறையில் புரிந்து

கொண்டதன் விளைவுதான். ஏனெனில், **உலகம் உண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாதது மான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்** என்று அவ்வசனத்தில் உள்ளது.

அருமையானவர்களே, நான் மறுபடியும் சொல்லுகிறேன், **இது உலகத்தின் முடிவைக் குறிக்கும் வசனம் அல்ல.** மாறாக, இது எருசலேமின் அழிவைக் குறித்துப் பேசும் ஒன்று தான். எப்படியெனில், வசனம் 34 –ல். இயேசு **இவைகளெல்லாம் சம்பவிக்கும்ன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்**' என்று சொல்லியுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

இவ்வசனங்களில், இயேசு கூறின உபத்திரவங்கள் அவர் சொல்லிய 40 ஆண்டுகளுக்குள், அதாவது, **ரோம ராணுவம் எருசலேமைத் தாக்கி மேற்கொண்ட போதே நிறைவேறிவிட்டது.** ஆனால், **உலகம் இதுவரை பார்த்திராத மிக மோசமான உபத்திரவமாக** இருக்கும் என்று **வேதம் கூறுகிறதே** அது பற்றி என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டு, இவ்வுண்மையை ஆட்சேபிப்பார்கள். இன்னும், எருசலேமின் அழிவில் நடந்ததை விட மிக மோசமான நிகழ்வுகள் **அதன் பின்னர் நிச்சயமாக நடந்துள்ளன** என்றும், யூத இனப்படுகொலை நடந்தபோதுஅதிகமான மக்கள் கொல்லப்பட்டனர் என்றும் சொல்லி தங்கள் தவறான வாதத்துக்கு வலுசேர்க்கும்படியாக வாதிடுவார்கள்.

ஆனால், பண்டைய யூத சரித்திராசிரியர் **ஜோசிஃபஸ்** (Josephus) எருசலேமின் அழிவு பற்றி எழுதியுள்ள பின்வரும் அறிக்கையை நீங்கள் கவனிக்கக் கேட்கிறேன்.

1. எருசலேமின், முற்றுகை மற்றும் சண்டையின்போது, எருசலேமில் 11,00,000 ( 11 இலட்சம்) யூதர்கள் இறந்தனர் என்றும், 97,000 பேர் பிடிக்கப்பட்டு அடிமைகளாக கொண்டு செல்லப்பட்டனர் என்றும்.

2. பெண்கள் பசிக் கொடுமையால் குழந்தைகளையே சாப்பிட்டனர் என்றும், ஆண்கள் வீடுகளுக்குள் புகுந்து குழந்தைகளின் வாயில் இருந்த உணவை பிடுங்கித் தின்றனர் என்றும், அண்டை வீட்டுக்காரர்கள் வைத்திருந்த உணவைக் கொள்ளையடித்தனர் என்றும்,

3. பணக்கார யூதர்கள் தங்கள் செல்வங்களைப் பாதுகாக்க, தங்கக் காசுகளாக மாற்றி விழுங்கினார்கள் என்றும். இப்படிச் செய்கிறார்கள் என்று ரோம ராணுவம் கண்டுபிடித்த போது. யூதர்களின் வயிற்றைக் கிழித்துத் தங்கக் காசுகளை தேடினார்கள் என்றும். இதினிமித்தம் ஒரே இரவில் 2000 பேர் கொல்லப்பட்டார்கள் என்றும்

4. யூதர்களில் அநேகர் ரோமானிய வீரர்களால் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர் என்றும், ஆயிரக்கணக்கானோர் பல்வேறு உடல் நிலைகளில் சிலுவையில் அறையப்பட்டனர் என்றும், அங்கிருந்த மரங்கள் முழுவதும் சிலுவைகளாகப் பயன்படுத்தப்படும் வரை, இன்னும் சிலுவைகளை அமைப்பதற்கான கூடங்கள் நிரம்பி வழியும் வரை இது தொடர்ந்ததென்றும் கூறுகிறார்.

5. அவரது, கணக்கின்படி, ஒரு மூன்றே மாதங்களில் 115,800 (ஒரு இலட்சத்துப் பதினைந்தாயிரத்து எண்ணூறு சடலங்கள் ஒரு நகர வாயில் வழியாக எடுத்துச் செல்லப்பட்டன என்றும், மொத்தம் 6,00,000 (ஆறுலட்சம்) பேர் இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டனர் என்றும் கூறுகிறார். சடலங்களை இதற்கு மேலும் நகருக்கு வெளியே வீச முடியாது என்ற நிலை வந்த போது, அவை நகருக்குள் உள்ள பெரிய வீடுகளில் கிடத்தி வைக்கப்பட்டன என்றும்,

6. சிறைபிடிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் மிருகங்களுடனும், ஒருவரோடொருவரும் களங்களில் சண்டையிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதென்று கூறுவதோடு. **இந்தக் கேளிக்கை** பார்வையாளர்களின் மகிழ்ச்சிக்காகச் செய்யப்பட்டதாகவும் கூறுகிறார். இவ்விதமாக, எருசலேம் தூக்கியெறியப்பட்டு,,யேசு முன்னுரைத்தது போல் தேவாலயம் முற்றிலும் அழிக்கப்பட்டதை உறுதி செய்கிறார்.

இதன்மூலம் மத்தேயு 24:21 வசனம் சொல்லர்த்த ரீதியாக அப்படியே நிறைவேறியுள்ளது. ரோம ராணுவ வீரர்கள் கொள்ளையடிக்கப் பட்டணத்துக்குள் புகுந்துபோது கண்ணில் பட்டவர்களையெல்லாம் கொன்று குவித்ததோடு, வீடுகளையும், தப்பிக்கும்படியாய் வீடுகளுக்குள் ஓடிப்போனவர்களையும் அப்படியே தீயிட்டு கொளுத்தியதாகவும் கூறுகிறார். வீடுகளுக்குள் பட்டினியால் இறந்தவர்களின் சடலங்கள் மட்டுமே இருந்ததால், கொள்ளையிடச் சென்றவர்கள் வெறுங்கையோடு திரும்பியதாகவும் கூறுகிறார். ஒருவேளை, ரோமச் சிப்பாய்கள் இறந்தவர்களுக்கு இரக்கம் காட்டினாலும், உயிரோடிருப்பவர்கள் மீது எவ்விதக் கருணையும் காட்டவில்லை. ஆம், எதிர்ப்பட்ட ஒவ்வொருவரையும் கொன்று குவித்தனர். அதன் மூலம் இறந்தவர்களின் உடல்களால் சந்து பொந்துகளெல்லாம் நிரம்பிவிட்டது. அங்கே, எரிந்து கொண்டிருந்த ஏராளமான உடமைகள் வழிந்தோடிய மரித்தவர்களின் இரத்தத்தால் அணைந்து போகும் அளவிற்கு நகரத்திற்குள் இரத்தம் ஆறாய் ஓடியது என்கிறார்.

அப்படியானால், இவைகள் நமக்குச் சொல்லும் செய்தி என்ன ? **மகா உபத்திரவம்** என்றழைக்கப்படும் எதிர்கால நிகழ்வு எதுவும் **இனி இதுபோன்று** இருக்கப் போவதில்லை. ஏனெனில், மத்தேயு 24 –ல், இயேசு சொன்ன உபத்திரவம் என்பது, அவர் கூறிய பிறகு. அவர் கூறியதுபோல் கொஞ்ச காலத்துக்குள்ளாகவே, அதாவது கிபி. 70 –ல் நடந்தேறிவிட்டது.

(தொடர்ச்சி அடுத்த மாதம்...)

# பாட்டு

## J.C. சோட்

கிறிஸ்தவ மார்க்கம், பாடித் துதிக்கும் ஒரு மார்க்கமாகும். புதிய ஏற்பாட்டு ஆராதனையில் பாடல் ஒரு பகுதியாகும். ஆராதனையின் அதிக்கிய பங்கை வகிக்கும் இதைப் பற்றி இந்த சுருக்கமான பாடத்தில் கவனமாகப் பார்ப்போம்.

முதலாவதாக, பாடல்கள் சம்பந்தப்பட்ட வேத வசனங்கள் பலவற்றை நாம் கவனிக்க விரும்புகிறோம்.

1. 'அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்' [மத்தேயு 26:30].

2. 'நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்'.

3. 'புறஜாதியாரும் இரக்கம் பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப் படுத்துகிறார்களென்றும் சொல்லுகிறேன். அந்தப்படி இதினிமித்தம் நான் புறஜாதிகளுக் குள்ளே உம்மை அறிக்கை பண்ணி, உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது'. ரோமர் [15:9]

4.'நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்' [1கொரி 14:15].

5. 'சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்..' [ 5:19].

6. கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங் களினாலும் தீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் '[கொலோசெயர் 3:16]. பாடி:

7. 'உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன்..' [எபி. 2 : 12].

8. 'உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக் கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால், சங்கீதம் பாடக்கடவன்'. [யாக்கோபு 5 : 13].

நன்றி தெரிவிக்கும் ஜெபங்களை நாம் ஏறெடுத்தல் வேண்டும். 'நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்' (பிலிப். 4:6) உதவி தேவைப்படும் வேளைகளில் நாம் ஜெபிக்க வேண்டும். **'அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக் கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்.**' (அப். 12:5).

நாட்டுத் தலைவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். (ரோமர். 13). ஒவ்வொருவரும் பிறர் நலன்களுக்காக ஜெபிக்க வேண்டும். 'நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.' (யாக்கோபு 5 : 16).

வியாதிக்காரருக்காக நாம் ஜெபிக்க வேண்டும். 'உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்ப் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக் கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.' (யாக் 5:14,15).

நாம் ஜெபிக்க கடமைப்பட்ட பல காரியங்களைப் பற்றியும், தனிப்பட்டவர்களைப் பற்றியும் கூறும் வேதத்தின் அநேக வசனங்களை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். இதில் சபை பற்றிய காரியங்களும், நமது குடும்பங்களைப் பற்றிய விஷயங்களும், வீழ்ந்து போனவர்களைப் பற்றியும் இன்னும் பல காரியங்களும் அடங்கும்.

**5. ஜெபத்தைக் குறித்த சில எச்சரிக்கைகளையும் வேத வசனம் தருகிறது :**

'அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனிதர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது,

அஞ்ஞானிகளைப் போல் வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப் போல நீங்கள் செய்யாதிருங்கள்: உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்,' (மத்தேயு 6:5–8) என்று கிறிஸ்து கூறுகிறார். மீண்டுமாக, 'மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியா திருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியா திருப்பார்,' என அவர் எச்சரிக்கிறார். (மத்தேயு 6:14,15).

எனவே, இறுதியாக, நமது ஆராதனையின் ஒரு பகுதியாகவோ அல்லது நமது அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகவோ ஜெபத்தை நாம் கருதிய போதிலும், அது முக்கியத்துவம் பெற்ற பெரிய காரியம் என நாம் அறிய வேண்டும். ஆனாலும், கிறிஸ்தவர்களாகிய நாம் மேற்கண்ட இரு வகையிலும் தேவனோடு உறவாட தனிச்சலுகை பெற்றிருக்கி றோம். அது மட்டுமல்லாமல், கர்த்தரும் அதை எதிர்பார்க்கிறார். ஆராதனையைப் பொறுத்தவரையில் கிறிஸ்தவர்கள் கூடி வராமல், வீட்டில் உட்கார்ந்து கொண்டே எவ்வாறு காணிக்கை செலுத்தவோ அல்லது கர்த்தரின் பந்தியில் பங்கு பெறவோ டியாதோ, அவ்வாறே வீட்டிலிருந்து கொண்டே ஜெபங்களைச் செய்வது ஆராதனையில் பங்கு பெறுவதாகாது. ஆராதனைக்காக கூடிவரும் கிறிஸ்தவர்கள் வீட்டில் ஜெபம் செய்வார்கள். ஆனால், ஆராதனைக்காகக் கூடி வராத மக்கள் வீட்டிலும் ஜெபம் செய்ய மாட்டார்கள். ஒருவேளை செய்தாலும் கர்த்தருக்கு விசுவாச முள்ளவர்களாக இருக்கக் கற்றுக்கொள்ளும் வரை அதனால் பயன் எதுவுமில்லை.

விசுவாசத்தோடு ஜெபியுங்கள் – கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். ஜெபம் வல்லமைமிக்கது.

+

---

**கொடுப்பதால் நமக்கு கிடைக்கும் ஆசிர்வாதம்**

1) வானத்தின் பலகனிகளை திறந்து கர்த்தர் நம்மை ஆசிர்வதிப்பார் - மல்கி 3:10

2) கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் - லூக் 6:38

3) கொடுக்கிறவனிடம் தேவன் பிரியமாயிருக்கிறார் - 2 கொரி 9:7,8,10

4) அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் - 2 கொரி 9:10

5) கொடுக்கிறவனை கர்த்தர் ஆசிர்வதிப்பார் - 2 நாளா 31:10

பெண்கள் பகுதி

# வழிபாட்டுக்குரிய வாழ்க்கை

Sis. ரேச்சல் நாயகம்

## அனுதின வாழ்வில் உண்மையான ஆராதனையின் பாதிப்புகள்

ஒரு கிறிஸ்தவன் ஆராதனை முடிந்து சென்ற பிறகு, அவனுடைய இருதயம் தேவனுக்கு மிகவும் அருகாமையில் இருப்பதினால் மகிழ்ந்து களிகூறும். மிகவும் சுத்தமுள்ளவனாகவும், கழுவப்பட்டவனாகவும் உணருவான். அவனுடைய கண்கள் ஒரு புதிய தேவபக்தியால் உயர்த்தப்பட்டிருக்கும். அந்நாளில் அவன் கற்றுக் கொண்ட காரியங்களினால் உந்தப்பட்டு அதன்படி வாழ முயற்சிப்பான்.

தேவனுடைய குணாதிசயங்களை அறிந்து கொண்ட கிறிஸ்தவன் அன்பாக, நீதியாக, உண்மையாக எல்லோரிடமும் சமாதானமாக இருந்து தேவனைப் பிரதிபலிக்க ஆவலாய் இருப்பான். அவன் ஒவ்வொரு நாளும் வாழ்வதே தேவனோடு கையோடு கைகோர்த்து நடப்பதோடு அல்லாமல் உகந்த பலியாகவும், ஆராதனையாகவும் மாறும்.

இந்த உலகில் இருக்கிற எல்லா மதமும் ஏதோ ஒன்றை பலியாக செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தும். சில மதங்கள், மிருக பலியை, சில மலர்களை, சில மதங்கள் பணத்தை செலுத்தும் படியாக, சிலர் அன்பு போதுமென்பார்கள். சில மதங்கள் இன்றும் அதிகமாக உயிர் பலி கூட கேட்பார்கள். தேவன் கிறிஸ்தவர்களிடம் ஒரு மனிதன் கொடுக்க முடிகின்ற மிகச் சிறந்த பலியாக ஒன்றை எதிர்பார்க்கிறார். அது அவனது சொந்த வாழ்க்கை. ஆனால், இறந்து போன ஓர் உடல் தேவனை சேவிக்க முடியாது. ஆகையால் தேவன் கேட்பது எதுவென்றால், 'அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை (ரோமர் 12:1)

'**சந்தோஷம் சமாதானம்**' எல்லா மனிதர்களும் விரும்பும் ஒன்றுதானே! சந்தோஷம் சந்தோஷத்திற்கு மூல காரணமே தேவன்தான். தேவனைப் போல் இருக்க நாம் எவ்வளவு பிரயாசப் படுகிறோமோ, அவ்வளவாய் சந்தோஷப்படுவோம். பாவத்திலும், தீமையிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் உண்மையான சந்தோசத்தை காணவே முடியாது.

சமாதானம் என்பது உள்ளத்தால் உணரப்படுவது, நன்மையானதைச் செய்யும்போது தான் மகிழ்ச்சி உள்ளத்தில் ஒளிரும். யாரை எப்படிக் கையாள வேண்டுமோ அப்படிக் கையாண்டு, நம்மை சுற்றிலும் இருக்கிறவர்களை மகிழ்ச்சியாக வைப்பதும், நம் மனச்சாட்சிக்கு சுத்தமாக இப்படிக் காரியங்களை செய்தால், அது தான் நமக்கு சமாதானத்தை கொடுக்கும்.

அருமையானவர்களே நாம் சேவிக்கத்தக்க வேறொரு தெய்வம் நமக்கு இல்லை என்பதை அறிந்து வைத்திருக்க வேண்டும். நமக்கு தெரிந்த ஒரு வசனம், 'அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர் களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28). கிறிஸ்தவர்களாகிய நாம் நம் வாழ்க்கை முழுவதையும் அவருக்கு கொடுக்கும்போது, நம்முடைய இருதயத்தின் பாடுகளையும், வேதனைகளையும் அவர் பார்த்துக் கொள்வார் என்று வாக்குக் கொடுக்கிறார்.

சில மதங்களை நாம் பார்க்கும் போது பக்தர்கள் என்ற பெயரில் தங்கள் தெய்வத்திற்கு தங்கள் உடலை பல வகைகளில் வருத்தி, சிதைத்து தங்கள் வேண்டுதல்களை செய்வார்கள். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நமக்கோ சரீரத்தை வருத்தச் சொல்லி தேவன் கேட்பதில்லை. மாறாக அவருடைய சாயலில் நாம் படைக்கப்பட்டதால் நம்முடைய சரீரம் பரிசுத்த தேவன் வாசம் செய்யும் ஆலயமாக சித்தரிக்கப்படுகிறது (1 கொரி. 3:16,17).

**கிறிஸ்தவத்தின் உயரமே சேவை செய்வதுதான், பிச்சை எடுப்பதல்ல.**

பல சமயங்களில் வேலை செய்யாமலேயே இறைவனுக்கு தொண்டர்களாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால், கிறிஸ்தவம் அப்படி போதிப்பதில்லை. ஒருவன் வேலை செய்ய மனதில்லையென்றால் சாப்பிடவும் கூடாது என்று தான் போதிக்கிறது (2 தெச.3:10; 1 தீமோ. 5:8; 1 தெச.4:10-12) ஆகிய வசனங்கள் மிகவும் அழகாக இதைப் பற்றி விளக்குகிறது.

**தேவனின் ஆதிக்கம் நம்மீது இருந்தால் நம் வாழ்க்கையில் மாற்றங்கள் இருக்கும்.**

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலா. 5:24)

நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். ஆகையால், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும் விசேஷ மாக விசுவாச குடும்பத்தார்ளுக்கும் நன்மை செய்யக் கடவோம் (கலா. 6:9,10).

இந்த அறிவுரைகள் நம் அனைவரின் வாழ்க்கைக்கும் பொருந்தும். மனுக்குலம் என்ற கடலுக்குள் வாழ்ந்து கொண்டு ள்ளோம். சூழ்நிலைகள், தேவைகள் நிறைந்து காணப்படுகின்றன. நம்மால் இயன்றளவு இவைகளைக் கண்டு, விசாரித்து இயன்றளவு உதவிக்கரம் நீட்ட வேண்டும். மிகச்சிறந்த உதாரணத்தை வேதாகமத்தில் நாம் காண முடியும் (அப்போஸ்தலன். 2:34-37 ) பல தேசங்களிலிருந்து பெந்தேகோஸ்தே பண்டிகைக்கு எருசலேமுக்கு வந்து கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் எல்லாவற்றையும் பொதுவாக வைத்து அனுபவித்தார்கள். தங்கள் நிலங்களையும், உடைமை களையும் விற்று, பகிர்ந்து கொண்டார்கள். பின்னாளில் எருசலேம் சபைக்கு உதவி செய்ய அப். பவுல் மக்கதொனியா, கொரிந்து, மற்றும் பிற இடங்களில் இருந்து பணம் வசூல் செய்ததை வாசிக்கிறோம். (2 கொரி. 9; ரோமர் 15:31).

ஆணீவே, அருமையான சகோதரிகளே, கிறிஸ்தவர்களாக நாம் இருப்பது மிகப்பெரிய சிலாக்கியம். அதிலும் சிறப்பு கிறிஸ்து நமக்காக இருப்பது அதிலும் மேன்மையானது. தேவன் இருக்கிறார் என்பதே மனுக்குலத்தின் பெரிய நம்பிக்கை. தேவன் சத்தியத்தை கொடுத்தார். அவருடைய இரக்கம் நம்மை இரட்சித்தது. அன்பினால் நம் ஆத்துமாக்களை நேசிக்கிறார். அதினால் நற்செய்தி அடங்கிய வேதாகமம் நமக்கு கிடைத்தது.

எனவே, நமக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாய் எல்லோருக்கும் விசேஷமாய் விசுவாச குடும்பத்தாருக்கும் நன்மை செய்வோம் (கலா.6:10).

அவரைத் தொழுது கொள்ளுகிற நம்முடைய வாழ்க்கையும் தொழுகைக்குரியதாய் இருக்க பாடுபடுவோம். தேவன் தாமே அதற்கு உதவி செய்வாராக ! ஆமென்!!

+

## நாம் எதற்கு கடனாளிகள்?

1) ***எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரிக்க - 2 தெச 2:13***

2) ***காணிக்கை செலுத்த - எசேக் 45:16***

3) ***ஒருவருக்கொருவர் அன்பு கூர - 1 யோ 4:11***

4) ***பரிசுத்தவான்களுக்கு உதவி செய்ய - ரோ 15:26,27***

5) ***சகோதரருக்கு ஜீவனைக் கொடுக்க - 1 யோ 3:16***

வாலிபர் பகுதி

# வழி விலகிப் போகிறீர்களா?

Dr. ஏபில் நாயகம்

இயேசு கிறிஸ்துவை அவருடைய உபதேசத்தின்படி ஏற்றுக் கொண்ட அனைவருமே இப்பொழுது தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்தால் **உண்மை கிறிஸ்தவர்களின்** எண்ணிக்கை மிக அதிகமாக இருந்திருக்கும். ஆனால், உண்மை நிலவரம் என்ன? சொற்ப எண்ணிக்கையில் தான் **உண்மையான கிறிஸ்தவர் களைக்** காண முடிகிறது. அதற்கு காரணம்? ஏற்றுக்கொண்ட விசுவாசத்திலிருந்து வழி விலகி பலர் பின்வாங்கிப் போய்விடுகிறார்கள். **உண்மை கிறிஸ்தவர்கள்** என்பதை ஏன் வலியுறுத்துகிறேன் என்றால், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அனைவரையும் நாம் **உண்மை கிறிஸ்தவர்கள்** என்று கருதிவிட முடியாது. யார் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்று ஆவிக்குரிய கனிகளைக் கொடுத்து, விசுவாசத்தில் முதிர்ச்சியை அடைய முயற்சி செய்து முன்னேறிச் செல்கிறார்களோ, அவர்களே **உண்மை கிறிஸ்தவர்கள்.** கிறிஸ்துவ குடும்பத்திலே பிறந்துவிட்டதாலேயே ஒருவரால் **உண்மை கிறிஸ்தவன்** என்ற நிலையை அடைய முடியாது. ஆனால், அப்படி நினைப்பவர்கள் தான் இன்று அதிகம்.

எபிரெயர் 2:1 ல் வழி விலகி போவதற்கு எதிரான ஓர் எச்சரிக்கையை வாசிக்க முடியும். **ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும்.** இது ஒரு பொதுவான எச்சரிக்கை. யார் வேண்டுமானாலும் வழி விலகிப் போக முடியும். அதற்கு யாரும் விதி விலக்கு அல்ல. நான் வழி விலகிப் போக மாட்டேன் என்றோ, வழி விலகிப் போக என்னால் முடியாது என்றோ, ஒருவராலும் சொல்ல முடியாது. ஏனென்றால், யார் வேண்டுமானாலும் வழி விலகிப் போக முடியும். நம் பார்வைக்கு ஒருவர் சிறந்த விசுவாசியாக இருக்கலாம். ஆனால், அவர் வழி விலகிப் போக வாய்ப்புண்டு. இன்னும் விசுவாசத்தின் ஆரம்ப நிலையில் இருப்பவர்களும் வழி விலகிப் போக முடியும். எனவே, யார் வேண்டுமானாலும் நிலை தடுமாற முடியும்.

வழி விலகிப் போவதற்கு ஒரு முக்கியமான காரியம் உண்டு. பலர் வழி விலக அது தான் காரணம். ஆம், **தாங்கள் பின் வாங்கி சென்று கொண்டிருக்கிறோம் என்பது** உணரப்படாமலேயே அது கொஞ்சம் கொஞ்சமாக நடக்கிறது. பிறகு வெகு தூரம் வழி விலகிச் சென்றதற்கு பின்னரே அதை அவர்களால் உணர முடிகிறது. கடலிலே மிதக்கும் ஒரு பொருளைப் போல, கொஞ்சம் கொஞ்சமாக அலைகளினாலே உள்வாங்கப்பட்டு, ஒரு கட்டத்திலே மீண்டும் கரையை நோக்கி வர முடியாத தூரம் வரைக்கும் அப்படிப்பட்டவர்

கள் சென்று விடுகிறார்கள். ஆனால், அந்த நிலை வரைக்கும் அந்த பொருள் இருப்பது என்னவோ கடலில் தான். அதைப்போல அவர்களும் விசுவாசத்தில் இருப்பது போல ஒரு மாயமான தோற்றம் இருக்கும். ஆனால், கரையிலிருந்து வெகு தூரம் சென்று விடுகிறார்கள்.

எபிரெயர் 2:1-4 வரை வாசித்தால், கேட்டவைகளை விட்டு விலகினால் தண்டனையிலிருந்து எப்படித் தப்புவோம் என்ற கேள்வி கேட்கப்படுகிறது. அப்படியென்றால், வழி விலகி செல்பவர்களும் பின் வாங்கிப் போகிறவர்களும் நிச்சயம் தண்டனையை அடைவார்கள். எனவே, கிறிஸ்தவராய் இருக்கின்ற ஒவ்வொருவரும் நாம் வழி விலகிப் போகிறோமா? அல்லது பின் வாங்கிப் போகிறோமா? என்ற கேள்வியோடு எப்பொழுதும் இருக்க வேண்டும். யாருமே தண்டனையைப் பெற விரும்புவதில்லை. அப்படியென்றால், பின் வாங்குதலுக்கான சில அறிகுறிகளை நாம் தெரிந்து கொள்வது அவசியம். அதற்கு பின், அந்த அறிகுறிகள் நம் வாழ்வில் உள்ளதா என்று சுயபரிசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த சுய பரிசோதனையை இந்த இதழை வாசிப்பதனால் இம்மாதம் மட்டும் செய்யாமல், ஒவ்வொரு நாளும் அதைச் செய்யப்பழக வேண்டும்.

வேத வசனங்களை வாசிப்பதும், அவைகளைத் தியானிப்பதும் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் அவசியம். சங் 1:1-4 வரை வாசித்தால் யார் பாக்கியவான் என்று அறிய முடியும். யார் ஒருவர் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும், பகலும் அதிலே தியானமாயிருக்கிறவனே பாக்கியவன என்று வாசிக்கிறோம். வசனம் 4-ல், இப்படி செய்யதவர்கள் துன்மார்க்கர் என்று அழைக்கப்படுகிறார்கள். ஏற்கனவே சொல்லப்பட்டது போல உண்மை கிறிஸ்தவன் ஆவியின் கனிகளை வெளிப்படுத்த வேண்டும். சங் 1-3ல், வேதத்தை தியானிப்பவர்களே நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரத்தைப் போல கனி கொடுப்பார்கள்: எப்பொழுது ஒரு கிறிஸ்தவன் வேத வாசிப்பையும் வசனங்களை தியானிப்பதையும் அற்பமாக எண்ணுகிறானோ, அப்பொழுதேஅவர் வழி விலகவும், பின் வாங்கவும் ஆரம்பித்து விட்டார். ஏனென்றால், அப்படிப்பட்டவர்கள் கனி கொடுக்க மாட்டார்கள். கனி கொடாத மரம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (லூக்கா: 3:9).

அடுத்து, ஜெபம் ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்க்கையிலும் அடிப்படையான ஒரு காரியம். தேவனும் மனிதனும் உறவாடும் நேரம் ஜெபமாகும். நம் தேவனோடே தொடர்பு கொள்ளவும். அவரோடு ஓர் ஐக்கியமான உறவில் இருக்கவும் ஜெபம் மிகவும் அவசியம். ஜெபம் அல்லாமல் தேவனோடே உறவாட, அவரோடே ஓர் உறவை அமைத்துக் கொள்ள வேறு வழி ஏதும் இல்லை. தன் சொந்த து குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே, ஜெபத்தின் வாயிலாகத்தான்

பிதாவோடு தொடர்பு கொண்டு பேசினார். அப்படியென்றால் ஜெபம் இல்லாமல் எப்படி ஒரு கிறிஸ்தவர் இருக்க முடியும். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் (தெசலோ.5:17) என்று பவுல் தெசலோனிக்கே சபைக்கு அறிவுறுத்துகிறார். அப்படியானால், ஜெபம் ஒரு வெற்றியுள்ள முன்னேற்றமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவசியம். ஜெபம் இல்லாத வாழ்க்கை – பின் வாங்குதலுக்கான முக்கிய அறிகுறியாகும்.

மேலும், விசுவாசத்தில் நமக்கு சகோதரர்களாயிருக்கிறவர்களிடம் நாம் ஐக்கியமாயிருக்க வேண்டும். ஒரு சபையில் நாம் அங்கமாயிருக்கும் பொழுது நம் சபை மக்களோடு ஐக்கியமும் அந்நியோந்நியமுமாய் இருக்க வேண்டியது அவசியம். அதற்கு தேவையான ஒரு காரியம் சபை கூடிவருதலை நாம் விரும்ப வேண்டும். தவறாமல் சபை கூடி வருதல் அதற்கு வழி வகுக்கும். சகோதரர்களுக்குள்ளே, சகோதரிகளுக்குளே ஒவ்வொரு நாளும் (எபி:3:13) ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, ஒருவரையொருவர் தேற்றி, ஊக்கப்படுத்துவது ஒரு சபையாக நாம் வளரவும், தனிப்பட்ட முறையிலே வளரவும் உதவும். ரோமர் 14:19–ல், ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நிந்யோநிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம் என்று வாசிக்கிறோம். எனவே, நாம் வழிவிலகி போகிறோமா, இல்லையா என்பதற்கு நாம் தேவனுடைய பிள்ளைகளோடே வைத்திருக்கிற உறவும், அதற்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவமும் ஒரு அறிகுறியாகும்.

இப்படிப்பட்ட அறிகுறிகள் நம் வாழ்க்கையின் எல்லாக் கட்டங்களிலும் ஏற்பட வாய்ப்புள்ளது. குறிப்பாக, வாலிபப் பருவத்திலே தேவனுடைய காரியங்களை பின்னுக்குத் தள்ளி உலக காரியங்களுக்கு முதலிடம் கொடுத்து அவவைகளில் சிக்குண்டு பின் வாங்கிப் போகிறவர்கள் அநேகராய் இருக்கிறார்கள். நாம் பெற்றுக் கொண்ட இரட்சிப்பை இறுதி வரைக்கும் பத்திரப்படுத்திக் கொள்வது அவசியம். நண்பர்கள் மத்தியில் பெயர் கிடைக்க வேண்டும்.

அவர்களைப் பிரியப்படுத்த வேண்டும் என்று தேவ காரியங்களை பின்னுக்குத தள்ளுவது நம்மை நிச்சயம் வழிவிலகச் செய்துவிடும். கொலோசெயர் 2:6 ல் வாசிப்பது போல, நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட படியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாக..... விசுவாசத்தில் உறுதிப்பட்டு.... அதிலே பெருக வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் வேர் கொண்டிருந்தால் நாம் அசைக்கப்படுவதில்லை. நாம் பின் வாங்கிப் போக முடியாது. எனவே, நம் ஆத்தும நங்கூரமான தேவனை நோக்கி முன்னேறிச் செல்வோம். பின்வாங்குதல் நமக்குரியதல்ல. ஆமென்.

சிறுவர் பகுதி

# தேவமனிதன் -2

**Dr. ப்ரைசி ஏபில்**

**ஹெ**லோ குழந்தைகளே !நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். போன மாதம் யோனா பற்றி பார்த்தோம்.இந்த மாதம் நோவாவை பற்றிப் பார்ப்போம்.

நோவா லாமேக்கின் மகன், அவருக்கு 3 மகன்கள் இருந்தனர். மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தம் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கின தற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தம் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான். தேவன் நோவாவிடம் தனது திட்டத்தைக் கூறினார், மேலும் நோவாவை தனது குடும்பத்திற்காக ஒரு பேழையைக் கட்டச் சொன்னார். ஜோடி விலங்குகளைக் கொண்டு வரும்படி அறிவுறுத்தினார்.

அன்பான குழந்தைகளே நோவா தேவனின் வார்த்தைகளை நம்பினார் அவர் தேவனுக்கு கீழ்ப்படிந்து இந்தப் பெரிய பணியைச் செய்தார். அவர் தனது பணியை முழுமையாக முடித்த பிறகுதான் அவர் பெருவெள்ளத்தில் இருந்து காப்பாற்றப்பட்டார்.

அன்பு குழந்தைகளே, நாம் தேவனுடைய வார்த்தைக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து, தினம் பாவங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். நோவாவின் குடும்பம் நோவாவுக்குக் கீழ்ப்படிந்தது. எனவே நாமும் நம் பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து சரியானதை, தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய வேண்டும்

*With lots of love*
*Praisey akka*

# கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்

## சங்கீதம் 15:12

**சகோ. K.M. பிலிப் பவானி**

**தே**வன் உலகில் அநேக அதிசயிக்கத்தக்க பிரம்மாண்டங் களைப் படைத்திருக்கிறார். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கடல், காற்று, உயர்ந்து நிற்கும் மாமலைகள் இன்னும் பல நம்மை பிரமிக்கவைக்கிறது. அவைகளின் தோற்றங்களும், மாபெரும் செயல்களும் என்றும் அப்படியே நிலைத்து நிற்கின்ற பாங்கும் பிரமிப்பூட்டுகின்றன. இத்தகு பிரம்மாண்டமான படைப்புகளோடு மனிதர்களாகிய நம்மை ஒப்பிடும்போது நாம் எம்மாத்திரம். நம்முடைய ஆயுள் நாட்கள் 70 வருடங்கள் பெலத்தின் மிகுதியால் 80 வருடங்கள் வாழ்ந்து இல்லாமல் போகிறோம். இப்படி அற்ப ஆயுள் உள்ள மனிதனைக் குறித்து வேதம் சொல்லுகிற மிகப் பெரிய உண்மை மிகவும் பிரமிக்க வைக்கிறது. அதுதான் **கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்** என்பது எவ்வளவு மாபெரும் ஆச்சிரியம். இதைத் தான் தாவீது என் உட்காருதலையும் **என் எழுந்திருக்கு தலையும் நீர் அறிந்திருக்கிறீர். என் நினைவுகளை தூரத்தி லிருந்து அறிகிறீர் நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர். என் கருவை உம்முடைய கண்கள் கண்டது** (**சங்.** 139:2,3,16) என்றும் கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் (சங்138:8) என்றும் தன் வாழ்க்கையில் அநுபவித்து எழுதியுள்ளார்.

இந்த அநுபவங்கள் நம் வாழ்க்கையில் இல்லாததால்தான் நமக்கு ஏற்படும் சோதனைகள் வேதனைகள் போராட்டங்கள் ஏமாற்றங்கள் தோல்விகளில் துவண்டு போய் கிதியோன் போல **கர்த்தர் எங்களோடிருந்தால் இவையெல்லாம் எங்களுக்கு நேரிடு வானேன்?** (நியா.6:13) என்று புலம்புகிறோம். இதற்குக்காரணம் உயிருள்ள மனுஷன் முறையிடு வானேன்? அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுவதென்ன? (புல.3:39) என்பதையும், அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்கிற தேவனுடைய அனுமதியையும் சரியாய்ப் புரிந்து கொள்ளாததேயாகும். அதேசமயம் தேவனைச் சரியாய்ப் புரிந்து கொண்ட ஆபிரகாம், யோசேப்பு, யோபு போன்ற நீதிமான்கள் புலம்புவதில்லை. இதைத்தான் தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகும் என்று (11பே1:2) பேதுரு வலியுறுத்துகிறார்.

ஆம், நம்முடைய தேவன் நம்மைக் காண்கிறவர் (2நாளா. 16:9). அவர் நம்மை விசாரிக்கிறார் (1பேதுரு 5:7) நமக்கு சகாயர் (சங். 54:4), நமது பரிகாரி (யாத்15:26), நம்மை விடுவிப்பவர் (சங். 46:1) நமக்காக யாவற்றையும் செய்து முடிப்பவர் (சங்.57:2). இதற்காகவே தேவன் நம்மை நினைத்திருக்கிறார் என்ற அறிவு நமக்குள் இருக்க வேண்டும்.

அன்பர்களே, கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார் என்ற தேவவாக்கைத் தனது அனுபவமாக்கிக் கொண்டு தைரியமாய் திருப்தி யாய் சமாதானமாய் வாழ்ந்த ஒரு விசுவாசப் பெண்மணியிடமிருந்து நல்ல அனுபவங்களை நாம் கற்றுக் கொள்வோம்.

வேதத்தில் தேவனால் எடுத்துப் பயன்படுத்தப்பட்ட பெரிய தீர்க்க தரிசிகளில் ஒருவரான எலிசாவின் நாட்களில் சூனேமில் வாழ்ந்த கனம் பொருந்திய ஒரு ஸ்திரீயின் அனுபவத்தைப் பார்ப்போம். இச்சரித்திரம் 2 இராஜா. 4:8-37; 8:1-6 ஆகிய பகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சூனேமியாளாகிய இவள் வாழ்ந்த நாட்களில் தேசத்தில் 7-வருடங்கள் கடுமையான பஞ்சம் ஏற்பட இருந்தது. இந்தப் பஞ்சத்திலிருந்து சூனேமியாளின் குடும்பத்தைக் காப்பாற்றும்படியாய் தேவன் தன் ஊழியக்காரன் எலிசாவை அவளிடத்தில் அனுப்பி நீ உன் வீட்டாரோடுங்கூட எழுந்து புறப்பட்டுப் போய் எங்கேயாகிலும் சஞ்சரி. கர்த்தர் பஞ்சத்தை வருவிப்பார். அது ஏழு வருடங்கள் தேசத்தில் இருக்கும் என்று சொன்னார். இங்கு தாவீதின் அனுபவ வார்த்தைகள் எவ்வளவு உண்மை என்று பாருங்கள். தமக்குப் பயந்து தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்களின் ஆத்துமதக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும், பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும் கர்த்தருடைய கண் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. (சங்33:18,19) என்று வேதத்தில் எழுதிவைத்துள்ளார். இப்படிக் கர்த்தருடைய நினைவில் சூனேமியாளும், அவள் குடும்பமும் இருந்ததால் அவளுக்கு ஆலோசனை கொடுக்கப்பட்டது. அவளும் தேவ மனுஷன் சொன்ன வார்த்தையின்படியே செய்து தன் குடும்பத்தை ஏழுவருட பஞ்சத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டாள்.

பிரியமானவர்களே! சற்று கவனியுங்கள். அந்த சூனேம் ஊரில் எத்தனையோ பேர் வாழ்ந்து கொண்டிருக்க இவளுக்குத் தேவனுடைய கிருபை, இரக்கம், தயவு கிடைக்க காரணம் என்ன? இப்படி கர்த்தருடைய நினைவில் தான் இருக்கும்படியாய் இவள் செய்த விசுவாச செயல்கள்தான் என்ன? என்பதை சற்று உற்று நோக்குவோம். ஏனெனில், கிரியைகளில்லாத (செயல்) விசுவாசம் செத்ததல்லவா? (யாக். 2:20).

**விசுவாச செயல்:1. தேவனைக் கண்டுபிடிக்கும்படி தனக்குக் கிடைத்த வாய்ப்புகளைச் சரியாய் பயன்படுத்திக் கொண்டாள்.**

சூனேமியாள் கனம் பொருந்தியவளாயிருந்த போதிலும்

பெருமைக்கு இடங்கொடாமல் தேவனுடைய தீர்க்கதரிசி எலிசாவுக்கு முன் தன்னைத் தாழ்த்தி தன் வீட்டில் போஜனம் பண்ணும்படி வருந்திக் கேட்டுக்கொண்டாள். மேலும், தன் வீட்டு மெத்தையின் மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி அதில் கட்டில் மேஜை, நாற்காலி, குத்து விளக்கும் வைத்து அதில் எலிசா கேயாசியுடன் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தாள்.

இப்படிச் செய்து தேவ ஊழியரைக் கனப்படுத்தக் கிடைத்த வாய்ப்பை முழுமையாய் பயன்படுத்திக்கொண்டாள். **நன்றாய் விசாரனை செய்கிற மூப்பர்களை விசேஷமாகத் திரு வசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திராக எண்ணவேண்டும்** (1தீமோ. 5:17) என்ற தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றினாள். இப்படித் தேவனைக் கனப்படுத்திய சூனேமியாளைத் தேவன் சும்மா விட்டு விடுவாரா? என்னைக் கனப்படுத்துகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் (1சாமு. 2:30) என்று வாக்குக் கொடுத்த தேவன் அவனைக் கனம் பொருந்திய ஸ்திரீ என்று பாராட்டியதோடு உற்சாகமாய் கொடுத்த அவளிடத்தில் பிரியம் வைத்து அவளுக்கு குழந்தை பாக்கியத்தைக் கொடுத்து, குறைவை நிறை வாக்கியதோடு **தாய்** என்ற கனத்தையும் கொடுத்து பெருமைப் படுத்தினார். மேலும், இப்படி நினைத்து நினைத்து கொடுத்து ஊழியரைத் தாங்கிய சூனேமியாளை ஏழு வருடப் பஞ்சத்தில் அவளைத் தாங்கும்படியாய் தேவன் அவளை நினைத்துப் பார்க்கிறார்.

அன்பானவர்களே! நாம் நம் தேவனைக் கனப்படுத்தப் பெற்றுள்ள வாய்ப்புகளை எண்ணிப்பாருங்கள். சபை கூடிவருதல், ஊழியரைக் கனப்படுத்துதல், ஊழியரோடு இணைந்து ஊழியம் செய்தல், காணிக்கை கொடுத்தல், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதல், ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தல் இப்படி நம் தகுதிக்கேற்ப அநேக வாய்ப்புகள் நமக்குக் கிடைத்துள்ளது. நாம் எந்தளவு இதில் ஈடுபாடு கொண்டு தேவனைக் கனப்படுத்தியிருக்கிறோம்? ஆதித்திருச் சபையார் சிதறடிக்கப்பட்டபோதும் அதையும் ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதி எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப். 8:4). பவுலின் நாட்களிலே பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கைக் கொடுக்க வாய்ப்புக் கிடைத்த மக்கெதோனிய நாட்டுச் சபையார் **தங்களுக்கு ஏற்பட்டிருந்த மிகுந்த உபத்திர வத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திர முடையயவர்களாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோசத்தினாலே மிகுந்த உதாரத்து வமாய் கொடுத்தார்கள் என்று பார்க்கிறோம்** (2 **கொரி.** 8:2). **இதனால் விசுவாசிகளின் தொகை** 4000, 5000 **திரளான ஜனங்கள் என்று பெருகிற்று.**

மேலும், சபைகள் சமாதானம் பெற்று பக்தி விருத்தி அடைந்ததே தவிர அப் 9:31 ஒரு போதும் வெட்கப்பட்டு துக்கப்பட்டு நிற்கும்படி தேவன் அவர்களை விட்டு விடவில்லை. நாமும் கூட சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டிராமல் தேவனைக் கனப்படுத்த கிடைத்த எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்துவோம். தேவ மகிமைக் கென்று நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு. **ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று குமாரன் இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவன் வாக்களித்திருக்கிறார்** (மத். 10:42) கொர்நெலியு செய்த ஜெபங்களும், தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாயிருந்தது என்று அப்போஸ்தலர் 10:4–ல் பார்க்கிறோம். ஆம், நாம் தேவனைக் கனப்படுத்தும்படியாய்ச் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் கர்த்தர் நினைத்திருக்கிறார். அவர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப் பண்ணுவார் (சங். 115:14)

+

## இயேசு கிறிஸ்து

- **இயேசு கிறிஸ்து** ஆதியில் தேவனோடிருந்தார் (யோவான் 1:1)
- **இயேசு கிறிஸ்து** எல்லாவற்றையும் படைத்தவராயிருக் கிறார் (கொலே.16,17)
- **இயேசு கிறிஸ்து** தேவ வல்லமையினால் கன்னி மரியா ளிடத்தில் பிறந்தார் (மத்.1:20,21)
- **இயேசு கிறிஸ்து** தேவனுடைய குமாரன் (பிலி.2:3-8)
- **இயேசு கிறிஸ்து** தேவனுடைய குமாரன் என்பதை நிரூ பிக்க அற்புதங்கள் செய்தார் (யோவான் 20:30,31)
- **இயேசு கிறிஸ்து** அவரில் விசுவாசம் வைப்பவர்களுக்கு இரட்சிப்பைத் தருகிறார் (I கொரி. 15:1-4)

# நாம் எங்கெல்லாம் பேசக்கூடாது?

சகோ. பாண்டியன்

**வே**தாகமம் ஒரு காரியத்தைச் செய்யாதே என்றால் மனுஷர் அதைப் பெரும்பாலும் செய்கிறார்கள் என்று அர்த்தம். அதனால் தான் இஸ்ரவேலருக்கு இதைச் செய், அதைச் செய்யாதே என்ற மாம்ச சம்பந்தமானக் கட்டளைகளை தேவன் நியாயப்பிரமாணமாகக் கொடுத்திருந்தார். இப்போது புதிய பிரமாணத்தை கொடுக்க வந்த தேவக்குமாரன் இயேசு நாம் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்ற எதிர்பாராத ஒரு பெரிய விஷயத்தைக் குறிப்பிடுகிறார். பொதுவாக, நாம் பேச விரும்புகிறோம், கவனிக்க விரும்புவதில்லை. ஆகவே, இயேசு கண்டிக்கும் விதமாக காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று சொன்னார். நாவடக்கம் பற்றி உலகத்தில் பல ஆலோசனைகள் இருந்தாலும் நம் வேதாகமத்தின் ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சற்றுப் பார்க்கலாம்.

ஞானியாகிய சாலமோன் இதைப்பற்றி எச்சரிக்கும் போது தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான். தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான் என்கிறார். நீதி. 13:3. காரணம், சந்தர்ப்பம் சூழ்நிலையறியாது பேசும் வார்த்தைகள் நமக்கே பிரச்சனைகளை உருவாக்கலாம். இருதயத்தின் நிறைவால் தான் வாய் பேசும் என்றும் ஒருவனுடைய பேச்சை வைத்தே அவனை நல்லவனா, கெட்டவனா என்று தீர்மானிக்கலாம் என்றும் இயேசு சொல்கிறார் (மத். 12:35,36) அதுமாத்திரமல்ல, நம் பேச்சு நம் ஆத்துமாவையும் பாதிக்கிறது. தன் வாயையும், நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான் (நீதி. 21:23). ஆகவே, எங்கெல்லாம் பேசக்கூடாது என்று கவனிக்கலாம். சங். 39:1 ல் என் நாவினால் பாவம் செய்யாதபடிக்கு துன்மார்க்கர் முன்பாக என் வாயைக் கடிவாளத்தால் அடக்கி வைப்பேன் என்கிறான் தாவீது. ஏன்? துன்மார்க்கர் தேவ பயமற்றவர்கள், அவர்கள் தங்கள் பார்வைக்கே ஞானிகள், அவர்கள் தங்கள் நம்பிக்கையை மனுஷர் மீதும், ஐசுவரியத்தின் மீதும் வைத்து வாழ்பவர்கள். தங்கள் இருதய சிந்தனையால் தீட்டுள்ளவர்கள். எனவே, அவர்கள் முன்பாக நாம் தாராளமாக பேச முடியாது. சில நேரங்களில் அவர்கள் பேச்சு நம்முடைய நம்பிக்கையை, விசுவாசத்தை அவமதிக்கும் அல்லது நம் கோபத்தை தூண்டி நம் வாயிலிருந்து தவறான வார்த்தைகள் புறப்படச் செய்யும். அதனால் தான் சொற்களின் மிகுதியில் பாவம் இல்லாமற் போகாது என்றும், ஆகாத சம்பாஷனை நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் என்று பார்க்கிறோம் (1 கொரி. 15:33).

கிறிஸ்துவின் உபதேசம் எவ்வளவுதான் தாழ்மையை வலியுறுத்திச் சொன்னாலும் சில வேளைகளில் நம் மனதில் மேட்டிமையான சிந்தை

வந்து விடுகிறது. தேவனுடைய இருதயத்திற்கேற்ற தாவீது கூட பிசாசின் தூண்டுதலால் தன் சேனையை எண்ணிக்கையிடும் பாவத்தில் அகப்பட்டு எல்லா ஜனங்களும் பாதிக்கப்பட காரணமானான் (1 நாளா 21:1) அதுபோல ராஜ்ஜியமும் வல்லமையும் தேவனுடையது என்பதை அறிவுறுத்த நேபுகாத் நேச்சார் ராஜாவை மாட்டைப்போல புல்லை தின்னும்படி செய்தார் தேவன். ஆகவே, நீ மேட்டிமை ஆன தினால் பைத்தியமாய் நடந்து, துர்ச்சிந்தனை உள்ளவனாய் இருந்தா யானால் கையினால் வாயை மூடு என்கிறது வேதம் (நீதி. 30:32)

நம் தேவன் பெருமைக்கு எதிர்நிற்கிறவராகவும் தாழ்மையுள்ளவர் களுக்குக் கிருபை அளிக்கிறவராகவும் இருக்கிறாரே. இவ்வுலகம் ஜீவனத்தின் பெருமைக்காக தங்கள் வருமானத்தைச் செலவழித்து தேவனைக் குறை சொல்லுகிற உலகமாக இருக்கிறது !

அடுத்து முக்கியமாக நம் கஷ்டமான காலங்களில் சோர்ந்து போய் புலம்பக் கூடாது. இது நமக்கு மிகவும் சவாலான காரியமாக இருக்கிறது. ஏற்கெனவே இஸ்ரவேலர் வனாந்திரத்தில் முறுமுறுத்து ஆசீர்வாதம் இழந்து அழிக்கப்பட்டார்கள். அதுபோல நாமும் முறுமுறுக்கா திருக்க இருக்க வேண்டும் (1 கொரி. 10:10) அப். உபதேசம் சோதனைகள் மனுஷருக்கு நேரிடுகிறது சகஜம், என்றும் அதனை சகிக்கிறவனே பாக்கியவான் என்றும் வலியுறுத்துகிறது இல்லை யென்றால் நம் தேவ பக்தி வீணாயிருக்கும் என்கிறார் யாக்கோபு. மேலும், யாரும் அனுபவித்து இராத பாடுகளைச் சந்தித்த யோபு கூட தேவன் முன்பாக, நான் நீசன் என்றும் என் கையினால் என் வாயைப் பொத்திக் கொள்ளுகிறேன் என்றும் சொல்கிறார் (யோபு 40:4) வாலிப்பிள்ளைகள் விசேஷமாக அப்படி சோர்ந்து போகாமலிருக்க எரேமியா ஆலோசனை சொல்லுகிறார் (புலம். 3:27,28) யோபுவின் மனைவி / தாவீதின் மனைவியெல்லாம் அவர்களை தூஷித்தார்கள். உண்மையில் ஊழியர்கள் மனைவிகளை இந்த இடத்தில் புகழ்ந்தே ஆக வேண்டும்! அநேக இக்கட்டு, அவமானம், பொருளாதாரக் கஷ்டங்களிலும் தங்கள் கணவருக்கு ஊழியத்தில் உதவியாக இருக்கும் அவர்களை மனதாரக் கண்ணீர் மல்கப் பாராட்டுகிறேன். தேவன் உங்களை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

தீமையான காலத்தில் பேசாமல் அமைதியாக இருப்பதே புத்திமானுக்கு அடையாளம் (ஆமோஸ் 5:12, 13) விசேஷமாக கூடுமிடத்தில் தேவ சமுகத்தில் நாம் எதையும் துணிகரமாக பேசக்கூடாது (பிர. 5:21) தன் பக்கம் நியாயம் இருந்தும் தேவ சித்தம் நிறைவேற ஏரோது ராஜா முன்பாக இயேசு அமைதியாய் இருந்தார். ஆகவே, தாவீது எரேமியா போல நாம் பரியாசக்காரரோடே களிகூராமல் தேவனுக்குப் பிரியமாக இருக்கப் பிரயாசப்படுவோம் (எரே. 15:17) எல்லா நெருக்கங்களிலும் தேவன் நம்மோடிருந்து காத்துத் தப்புவிக்கிறார். ஆமென்.

**கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்**

# தள்ளப்பட்ட மோசே

**சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை**

**முன்னுரை:**

1. சென்ற பாடத்தில் தன் சொந்த அண்ணன்களால் நிராகரிக்கப்பட்டு, விற்கப்பட்ட யோசேப்பு தன் தகப்பனுடைய முழு குடும்பத்தையும் காப்பாற்றினார் என்று பார்த்தோம்.

2. அவர் மூலம் எகிப்திலே யாக்கோபின் குடும்பத்தாராகிய இஸ்ரவேலர்கள் ஒரு பெரிய ஜனகூட்டமாக பெருகி வாழ்ந்து வந்தார்கள், யாத். 1:7 ; அப். 7:18.

3. இந்த யோசேப்பை அறியாத வேறொரு ராஜா ஆட்சிக்கு வந்து, இஸ்ரவேலர்களை அடிமைகளாகத் துன்பப்படுத்தினான், யாத். 1:8–14.

4. இந்தக் குழப்பத்திலே இஸ்ரவேலர் தங்கள் யெகோவா தேவனைத் தேடினார்கள், யாத். 2: 23–25.

**1. பார்வோன் இஸ்ரவேலரை முழுவதுமாகக் கட்டுப்படுத்தும்படி பிறக்கும் ஆண்குழந்தைகளையும் கொல்லுங்கள் என்று கட்டளையிட்டான், யாத். 1 : 15 – 16.**

அ. எகிப்தியர் இஸ்ரவேலர்களை ஒடுக்கி கடுமையான வேலை வாங்கினாலும் அவர்கள் அதிகமாகப் பெருகியதால் எகிப்தியர் பயம் அடைந்தார்கள், யாத். 1:12–14.

ஆ. இதற்காக எகிப்தின் ராஜா இஸ்ரவேலர்களுக்கு பிறக்கும் ஆண் பிள்ளைகளை எல்லாம் கொல்லும்படி கட்டளையிட்டான், யாத்.1:15–16.

1). அவன் (பார்வோன்) நம்முடைய ஜனங்களை வஞ்சனையாய் நடப்பித்து, நம்முடைய பிதாக்களின் குழந்தைகள் உயிரோடிராத படிக்கு அவர்கள் அவைகளை வெளியே போட்டுவிடும்படி செய்து, அவர்களை உபத்திரவப்படுத்தினான்,' அப். 7: 19.

2). அப்படியே இயேசுவானவர் பிறந்தபோது, '... ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான்,' மத். 2: 16.

இ. இந்த கொடுமையின் நடுவில் ஒரு லேவி பெண்மணி அழகான பையனை பெற்று மூன்று மாதங்களாக ஒளித்து வைத்தாள், யாத். 2: 1-2; அப். 7:20.

1). மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள், எபி. 11:23.

2). இயேசு பிறந்தபோது எரோதுக்கு பயந்து, யோசேப்பும் மரியாளும் அவரை எகிப்திலே சில காலம் ஒளித்து வைத்தார்கள்: '... கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான்,' மத். 2:13.

ஈ. மோசேயின் தாய் தொடர்ந்து பிள்ளையை மறைக்க முடியாததற்காக ஒரு பெட்டியில் வைத்து, அதை நைல் நதியின் நாணலுக்குள் மறைத்து, குழந்தையை கவனிக்கும்படி அதன் அக்காவை அனுப்பினாள், யாத். 2:3-4.

உ. அந்த நதியினிடத்திற்கு பழக்கமாக எகிப்தின் இளவரசி குளிக்கவரும்போது பெட்டியைப் பார்த்து, அதன் உள்ளே இருந்த பிள்ளைக்காக மனதுருகினாள், யாத். 2 : 6; அப். 7:21.

ஊ. பிள்ளையின் அக்கா ஓடிவந்து, பால் கொடுத்து வளர்க்கும்படி ஒரு எபிரெய பெண்மணியைக் கூப்பிடவேண்டுமா? என்று கேட்டாள், யாத். 2:7.

எ. இப்படியாக மோசேயினுடைய சொந்த தாயார் குழந்தையை தயவாக வளர்க்கும்படி தேவன் நிகழ்ச்சிகளை ஏற்படுத்தினார், யாத்.2:8-9.

II. மோசே தன் நாற்பது வயதில் அநித்தியமான அரண்மனை சந்தோஷத்தை விட தேவனுடைய மக்களோடு துன்பம் சகிப்பது சிறந்தது என்று எண்ணினார், யாத். 2: 11-25.

அ. மோசே, தன் சகோதரரின் கஷ்டமான வேலைகளைப் பார்க்கப்போகும்போது, ஒரு எகிப்தியன் ஒரு இஸ்ரவேலனை அடிக்கிறதை பார்த்து அந்த எகிப்தியனைக் கொன்றுவிட்டான், யாத். 2 : 11 :12. ஆனால் இஸ்ரவலர் மோசேயின் எண்ணத்தை அறியவில்லை.

1). 'அவனுக்கு நாற்பது வயதானபோது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று.

அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்குத் துணைநின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ்செய்தான். தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவா ரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்துகொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை,' அப். 7:23–25.

2]. 'இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங் களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்,' அப். 2:22–23.

ஆ. மறுநாள் இஸ்ரவேலர்களுக்குள்ளே சண்டை போடுவதை மோசே பார்த்து சமாதானப்படுத்த முயன்றபோது, அவர்கள் நேற்று எகிப்தியனை கொன்றதுபோல எங்களையும் கொல்லப்பார்க்கிறாயோ? எங்கள் மேல் அதிகாரியாகவும் நியாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்? என்றான், யாத். 2: 13 – 14; அப். 7:26–28.

இ. யோசேப்பைப்போல தன் சகோதர்களால் தள்ளப்பட்ட மோசே எகிப்தின் பொக்கிஷங்களைவிட கிறிஸ்துவினால் வரும் துன்பம் பெரியசெல்வம் என்றெண்ணி விசுவாசத்தோடு மீதியான் தேசத்திற்கு ஓடிப்போனார், யாத். 2:15.

விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, பார்வோனுடைய அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான், எபி. 11:24–27.

ஈ. அங்கே ஆசாரியனான எத்திரோவின் மந்தைகளுக்கு தண்ணீர் காட்டினத்தின்மூலம் அவர்களோடு தங்கும் வாய்ப்பைப் பெற்று அவருடைய மகளையும் மணந்துகொண்டார், . 2:16–21.

உ. எகிப்தின் ராஜா மரித்தபிறகு இஸ்ரவேலர் தங்கள் கொடுமையில் தேவனை நோக்கி அழுதார்கள், யாத். 2:23-25.

III. **தேவன் இஸ்ரவேலரின் கஷ்டத்தை உணர்ந்து தம்முடைய உடன்படிக்கையை நினைத்து அவர்களைக் காப்பாற்றும்படி தள்ளப்பட்ட மோசேயை அழைத்தார், யாத்.** 3:1-10.

அ. ஒரு நாள் மோசே தொடர்ந்து எரிகிற செடியை கவனிக்கும்படி நெருங்கி செல்லும்போது முட்செடியிலிருந்து தேவதூதன் மோசேயிக்கு இஸ்ரவேலரை விடுதலையாக்க நான் வந்தேன் என்றான், யாத்.3:2-8.

ஆ. ஏற்கனவே தள்ளப்பட்ட மோசே இஸ்ரவேலும் பார்வோனும் தன்னை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று சாக்குபோக்கு சொன்னார், யாத். 3:11-22.

இ. தேவன் மோசேயைக் கடிந்துகொண்டு அவனை உற்சாகப்படுத்தும்படி இரண்டு அற்புதங்களையும் தன் சகோதரன் ஆரோனை பேச்சாளனாகவும் கொடுத்தார், யாத். 4:1-7.

ஈ. இப்படியாக மோசே அற்புதங்களைச் செய்யும்போது இஸ்ரவேலர்கள் விசுவாசித்து ஆரோன் மூலமாக சொன்ன செய்தியை ஏற்றுக் கொண்டார்கள், யாத். 4:27-31.

உ. ஆனால் பார்வோன் அவர்களை நம்பாமல் மக்களுடைய வேலையைத் தடுக்கிறீர்கள் என்று குற்றப்படுத்தினான், யாத்.5:1-5.

ஊ. பார்வோனால் அவர்கள் வேலை மிகவும் கடினமாக்கப் பட்டதால் இஸ்ரவேலர்கள் மோசேயைக் குற்றப்படுத்தி மோசேயையும் தேவனையும் சந்தேகித்தார்கள், யாத். 5:6-23.

**முடிவுரை:** 1. மோசே பூமிக்குரிய ஆசைகளைவிட தேவனுக்காக வாழ்ந்தாலும் அவருடைய வாழ்க்கை கஷ்டம் நிறைந்ததாக இருந்தது.

2. இஸ்ரவேலர்கள் யோசேப்பைப்போல தங்கள் சகோதரனாகிய மோசேயைத் தள்ளிவிட்டாலும், தேவன் அவரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்பவராக அனுப்பினார்.

3. அதேபோல இயேசுவையும் அவருடைய சொந்தங்கள் ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள்:

1]. ‘அப்பொழுது அவருடைய சகோதரர் அவரை நோக்கி: நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும் பார்க்கும்படி, இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப் போம். பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்த ரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்: நீர் இப்படிப்பட்டவை களைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும் என்றார்கள். அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்,‘ யோவான். 7:3-5.

2]. ‘இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும், இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக்குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார்,‘. 6:3-4.

3]. இயேசு அவர்களை நோக்கி: வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்‘என்றார், மத். 21:42-43.

4. தேவனுடைய வழியும் மனிதர்களுடைய வழியும் எவ்வளவு வித்தியாசமானது என்பதை நாம் புரிந்துகொண்டு நடக்கவேண்டும், ஏசா. 55:8-9.

5. நாமும்கூட பூமிக்குரிய நன்மைகளைவிட ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் பெரியது என்று எண்ணி வாழவேண்டும், எபே. 1:3.

6. மேலும் கிறிஸ்துவுக்காக வாழ்க்கையில் கஷ்டங்களை சகித்து, தேவனுக்காக பரலோகத்தின் நம்பிக்கையோடு வாழவேண்டும் என்று முடிவு செய்வோமாக! ஆமென்!!

+

## பிள்ளைகளே (1 யோவான்)--

1) பாவஞ் செய்யாதிருங்கள் - 2:1

2) இது கடைசி காலம் - 2:18

3) அவரில் நிலைத்திருங்கள் - 2:28

4) ஒருவராலும் வஞ்சிக்கபடாதிருங்கள் - 3:7

5) உண்மையாய் அன்பு கூறுங்கள் - 3:18

6) நீங்கள் தேவனால் உண்டானவர்கள் - 4:4

14.04.2024 திருச்சி மாவட்டம் புதுக்குடியில் நடந்த
இலவச மருத்துவ முகாமின் போது...



13.04.2024 பெரம்பலூரில் நடந்த இலவச மருத்துவ முகாமின் போது...






## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Heaven TV
Every Thursday, Friday, Saturday 6:30 - 7.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026

